ஆண்டு சந்தா ரூ. 60/-

# அன்பு பகிர்வு இயக்கம்



சுதேச ஊழியர் சாட்சி

# Rev. கேகு வாசுனியா

### மத்தியப்பிரதேசம்



இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! எனது பெயர் கேகு வாசுனியா. நான் மத்தியப்பிரதேசம் மாநிலத்திலுள்ள ஜாபுவா என்ற மாவட்டத்தைச் சேர்ந்த ஹத்தியாதள்ளி என்ற கிராமத்தைச் சேர்ந்த ஒரு பீல் ஆதிவாசி. நானும் எனது குடும்பததிலுள்ள அனைவரும் இறந்தவர்களின் ஆவிகளை வணங்கும் பழக்கமுடையவர்களாக இருந்தோம். மேலும் திருடுவதும், சாராயம் காய்ச்சி விற்பதும் எங்களது தொழிலாகும். மேலும் நான் அனைத்து பாவங்களையும் செய்து துன்மார்க்க ஜீவியம் செய்துவந்தேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில், எனது மூத்த சகோதரனுடைய மூத்த மகளுக்கு வெட்டு வியாதி வந்து மிகவும் வேதனைப்பட்டாள். அநேக மருத்துவர்களிடமும், மந்திரவாதிகளிடமும் கொண்டு சென்றோம். எந்தவித பலனும் கிடைக்கவில்லை. மேலும் மந்திரக் கிரியைகள் செய்தல், ஆடுகள் கோழிகள் போன்றவற்றை பலியிடுதல் போன்ற காரியங்களில் பணத்தை செலவு செய்து பார்த்தும் கூட பலன் ஒன்றும் கிடைக்கவில்லை. மிகவும் மனமுடைந்த நிலையில் எங்களது குடும்பம் இருந்தபோது, இயேசு கிறிஸ்துவைக் குறித்தும், பக்கத்துக் கிராமமான அந்தர்வேலியாவில் சகோ. பூர்சன் புரியா அவர்கள் நடத்திவரும் கூட்டத்தைக் குறித்தும் கேள்விப்பட்டு, அங்கு சென்றால் சுகம் கிடைக்கும் என்று விசுவாசித்து, எனது சகோதரரின் மகளை அங்கு அழைத்துச் சென்றோம். ஊழியரும் விசுவாசிகளும் மிகவும் பாரத்துடன் ஜெபித்தனர். தேவன் ஜெபத்தினைக் கேட்டார். அல்லேலூயா! ஆம் தேவன் அந்த மகளுக்கு ஒரு வாரத்திற்குள்ளாகவே பூரண சுகத்தைக் கட்டளையிட்டார். இந்த அற்புதத்தைக் கண்ட நாங்கள் குடும்பமாக இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டோம். ஒரு சில ஆண்டுகளுக்குப் பிறகு எனது உடம்பில் அரிப்பு வியாதி ஏற்பட்டது. இதற்காக நான் பாரத்துடன் ஆண்டவரிடம் ஜெபம் செய்தேன். தேவன் எனக்கும் அற்புதம் செய்தார். ஆம், எனக்கிருந்த அரிப்பு வியாதியை அடியோடு மறையச் செய்தார். எனக்கு சுகம் கொடுத்த தேவனுக்கு ஊழியம் செய்ய பாரம் ஏற்படவே, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, வேதாகமப் பயிற்சி பெற்று, ஆண்டவரின் அபிஷேகம் பெற்று எனது சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறேன். தற்போது சுமார் 40 குடும்பத்தினரை ஆண்டவரிடம் வழிநடத்தியுள்ளேன். மேலும் Shalom Diociese In India மூலமாக B.T.S., (Bachlor of Theological Studies) முடித்து போதகராக பிரதிஷ்டை செய்யப்பட்டு ஊழியம் செய்து வருகின்றேன். தொடர்ந்து எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள். மேலும் என் மூலமாக இன்னும் ஐந்து கிளை சபைகளும், ஐந்திற்கு மேற்பட்ட ஊழியர்களும் எழுப்பப்பட ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **கிளாட்சன் பாஸ்கரன்,** சென்னை.

## உங்கள் சகோதரனிடமிருந்து....



***கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!***

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

உங்களுடன் அக்டோபர் மாத மலர் மூலமாக தொடர்பு கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இம்மட்டும் கடந்த 9 மாதங்களாக, தேவன் நம்மை நடத்தி வந்தபடியால் தேவனைத் துதிப்போம். தேவகிருபையால், கடந்த செப்டம்பர் மாதம் மூன்று மாநிலங்களிலும் அனைத்து ஊழியர்கள் கூடுகைகளை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்தார். மத்தியபிரதேசத்திலுள்ள சுமார் 150க்கும் அதிகமான சபைகளையும், 130 சுதேச ஊழியர்களையும் கண்காணிக்கும்படி, சபை வளர்ச்சிக்கான பணிகளை செய்திடவும், தரிசனப்பணியை நிறைவேற்றவும் **சகோ. கார்த்திகேயன்** மற்றும் அவர்கள் மனைவி **சகோதரி. ஏஞ்சல்** குடும்பமாக ஊழியத்தில் இணைந்துள்ளார்கள். அதுபோல இராஜஸ்தான் மாநிலத்தில் 250 சபைகளையும் 230 சுதேச ஊழியர்களின் வளர்ச்சிப்பணிகளையும் நிர்வகிக்க **சகோ. கேரட்** அவர்கள் குடும்பமாக ஊழியத்தில் இணைந்துள்ளார்கள். குஜராத் மாநில சபை வளர்ச்சிப் பணிகளை சகோ. **ஜெயராஜ் பர்த்தலேமேயு** அவர்களும் கவனித்து, ஊழியப் பொறுப்பை நிறைவேற்றி வருகிறார்கள். ஆகவே, மூன்று State Church Network Administrators தங்களது பணிகளை பரிசுத்த ஆவியானவரின் நிறைவுடன் தேவ சித்தத்தின்படி செய்ய அவர்களுக்காக ஜெபிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், **Shalom Charity Mission** மூலமாக நடைபெறும் ஆதிவாசி மாணவர் கல்வி உதவித்திட்டம், மருத்துவப்பணிகள், பயிற்சி முகாம்கள், குடிநீர்த்திட்டம், முதியோர் கல்வித்திட்டம் இவைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக 10,000 பீல் ஆதிவாசி மாணவர்களின் கல்விப் பணித் திட்டங்களை நம் பணித்தளத்தில் சகோ. **டேனியல் ஆஸ்வால்ட்** நிறைவேற்றி வருகிறார்கள். தற்போது நம் பணிகள் மூலமாக 750 மாணவர்களும், **Caruna Bal Vikas** திட்டத்தின் மூலமாக 600–க்கும் அதிகமான மாணவர்களும் தாங்கப்பட்டு வருகிறார்கள். தேவன் தாமே புதிய இளைய தலைமுறையை தம் நாமத்தின் மகிமைக்கென உருவாக்க ஜெபியுங்கள்.

**புதிய சுதேச ஊழியர்களுக்கான பயிற்சி**

செப்டம்பர் 20–22 வரை புதிய ஊழியர்கள் குடும்பங்களுக்கான சிறப்பு கூடுகை மற்றும் **Orientation** நடைபெற்றது. அதை தொடர்ந்து, தெரிந்தெடுக்கப்பட்ட ஊழியர்கள் 40 பேர்களுக்கு 27.09.2010 முதல் 31.10.2010 வரை நடைபெற்ற 5 வார பயிற்சிகள் அபரிமிதமாக

ஆசீர்வதிக்கப்படவும் அக்கினியாக ஊழியர்களை தேவன் பயன்படுத்தவும் ஜெபியுங்கள். மட்டுமின்றி இந்த 20ம் ஆண்டில் 450 ஊழியர்களும் 450 புதிய ஊழியர்களை எழுப்ப ஜெபியுங்கள்.

## ஷாலோம் அற்புதத்தின் நாள் (Shalom Miracle Day)

செப்டம்பர் 24ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று அனைத்து ஷாலோம் சபைகளிலும் **ஷாலோம் அற்புதத்தின் நாள் (Shalom Miracle Day)** 450 ஊழியர்களும் நடத்த தேவன் கிருபை தந்தார். மூன்று மாநிலங்களிலும் உள்ள 450 ஊழியர்களுக்கும் ஜெப எண்ணெய் வழங்கப்பட்டது. அதற்காக அன்பு சகோதரர். **டாக்டர். பால்தினகரன் (இயேசு அழைக்கிறார்)** அவர்கள் 5 லிட்டர் ஜெப எண்ணெயை ஜெபித்துத் தந்தார்கள். ஷாலோம் மிஷன் ஞாயிறு சிறப்பு அறிக்கையை அடுத்த இதழில் வெளியிடவிருக்கிறோம்.

## மூப்பர்கள் வாலிபர்கள் மற்றும் சிறுவர் முகாம்கள்

தேவ கிருபையால், செப்டம்பர் 20–27 வரை குஜராத்தில் உள்ள 102 சபைகளின் மூப்பர்கள் அனைவர்களுக்கும் சிறப்பு கூடுகைகளை 6 இடங்களில் நடத்த தேவன் கிருபை தந்தார். செப்டம்பர் 19,20 தினங்களில் குஜராத் சபைகளுக்கான சிறுவர் முகாம்களும்; 25,26 ஆகிய நாட்களில் குஜராத் சபைகளுக்கான வாலிபர் முகாம்களும் நடத்தப்பட்டன. சகோதரி. வஹிதா தேவதாஸ் தலைமையில் பயிற்சி குழுவினர் சிறப்பாக நடத்தினார்கள்.

## சிறந்த அறுவடை

கர்த்தர் இந்த வருடத்தில் நல்ல மழை பெய்யும்படியாக கிருபை தந்துள்ளார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. உங்கள் ஜெபங்களுக்காக மிக்க நன்றி கூறுகிறேன். ஒவ்வொரு கிராம ஆலயங்களிலும் விளைந்த பலனின் "**முதற்பலன்களை**" கொண்டு வந்து சபையார் படைத்து தேவனுக்கு நன்றி செலுத்தினார்கள். தொடர்ந்து நல்ல அறுவடையை தேவன் கட்டளையிட ஜெபியுங்கள்.

## ஷாலோம் மிஷன் ஞாயிறு (Shalom Mission Sunday)

ஷாலோம் ஊழிய பாதையில் 20 வருடத்தில் பிரவேசிக்க கொடுத்த தேவனுக்கு நன்றி செலுத்தி, **ஷாலோம் மிஷன் ஞாயிறு** குஜராத்தில் **3.10.2010** அன்றும் இராஜஸ்தானில் **17.10.2010** அன்றும் மத்தியபிரதேசத்தில் **24.10.2010** அன்றும் அனைத்து சபைகளிலும் கொண்டாட உள்ளார்கள். அனைத்து ஆயத்தங்களுக்காகவும், தெய்வ பயத்துடன், பரிசுத்தமாக காணிக்கையை மட்டுமல்ல, அனைத்து பீல் சுதேச ஊழியர்கள், மூப்பர்கள் விசுவாசிகள் தங்களை தரிசனப்பணிக்கும் ஒப்புக் கொடுக்க தேவனை வேண்டிக் கொள்ளுங்கள். அவர்கள் கடந்த ஆண்டில் ரூ.12 இலட்சங்களுக்கும் அதிகமாக காணிக்கை தந்து தேவனை மகிமைப்படுத்தினது

குறிப்பிடத்தக்கது. ஷாலோம் மிஷன் ஞாயிறு தொடர்ந்து 4, 18, 25 தேதிகளில் நடைபெற உள்ள ஊழியர்களின் கூடுகையை தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

## மருத்துவ முகாம் மற்றும் ஆரம்ப சுகாதார பயிற்சி

அக்டோபர் 11 முதல் 16ம் தேதி வரை 50 பேர்களுக்கு ஆரம்ப சுகாதார பயிற்சி கொடுக்கப்பட உள்ளது. அதன் **Dr. Abel, Dr.Jolly** மற்றும் மருத்துவத்துறை குழுவினராக வந்து நடத்தித் தர உள்ளார்கள். மேலும் தாகோத் மற்றும் ஜாலோத்தில் உள்ள நம்முடைய ஷாரோன் மருத்துமனையிலும் சிறப்பு இலவச மருத்துவ முகாம்கள் நடைபெற உள்ளது. தேவன் தாமே இந்த முகாமை ஆசீர்வதிக்க அன்புடன் வேண்டுகிறேன்.

## ஆயுட்கால அங்கத்தினர்

ரூ. 1000 செலுத்தி ஷாலோம் ஊழிய ஆயுட்கால அங்கத்தினராக இணைய நான் கேட்டுகொண்டபடி இதுவரை 16 பேர் காணிக்கை அனுப்பியுள்ளார்கள். இம்மாதம் அக்டோபர் 1ம் தேதி முதல் அதற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்ய இருக்கிறோம். ஆயுட்கால அங்கத்தினருக்குறிய சான்றிதழ், ரசீது மற்றும் Pamphlet ஆகியவற்றை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். ஷாலோம் ஊழிய ஆயுட்கால அங்கத்தினராக நீங்களும் இணைந்து, உங்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களை இணையச் செய்து, 7000 கிராமங்களில் 1 கோடி பீல் மக்களையும் தேவனண்டையில் வழி நடத்தும் தரிசனப் பணியை நிறைவேற்ற கரம் கொடுக்க அன்புடன் வேண்டுகிறேன்.

## ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்ப முகாம் 2010

கர்த்தருக்குச் சித்தமானால் நவம்பர் 8,9,10 தேதிகளில் **இயேசு விடுவிக்கிறார்** ஊழியங்கள் மூலமாக நடைபெறவுள்ள ஷாலோம் அனைத்து ஊழியர்களின் முகாமிற்காக ஜெபியுங்கள். தேவனுடைய பாதுகாவலுக்காக, கூட்ட ஊழியங்களுக்காக, பிரயாண வசதிகள், இயற்கை சூழ்நிலைகளுக்காக, எல்லாவற்றிக்கும் மேலாக பீல் மக்கள் மத்தியில் மிகப் பெரிய எழுப்புதலை இவ்வருடம் காணும்படியாக பாரத்துடன் ஜெபியுங்கள். குறிப்பாக **சகோ. மோகன் சி.லாசரஸ்** அவர்களையும், **போதகர். டேவிட் பிரகாசம்** (கோவை) அவர்களையும் தேவன் வல்லமையாக பயன்படுத்த ஜெபியுங்கள். அனைத்து தேவைகள் சந்திக்கப்பட, குறிப்பாக இயேசு விடுவிக்கிறார் மூலமாக தரப்படும் நிதி உதவிகளுக்காக தேவனை துதித்து, இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

தொடர்ந்து பணித்தள அலுவலகம், தூத்துக்குடி அலுவலகம் பயிற்சி கூடம்; **Caruna Bal Vikas projects** பயிற்சித்திட்டம் அனைத்திலும் பணிபுரியும் தேவ பிள்ளைகளை தேவன் ஆசீர்வதிக்க, நல்ல ஞானம், சுகம் பெலன் தரும்படியாகவும், அவர்கள் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

எங்கள் அன்பு பிள்ளைகள் காருண்யாவில் பயிலும் **Titus (M.B.A, II year)**, **Shalom (B.Teh Media 4th Year)** குறிப்பாக, அன்புமகள் **Joy Shekinah** (+2 முடித்து மருத்துவப் படிப்பிற்காக ரஷ்யாவுக்கு அக்டோபர் 2ம் வாரம் புறப்படுகிறாள்) ஆகியோருக்காக தயவு செய்து ஜெபியுங்கள். தேவன் தாமே மகளுக்கு கிருபை தரும்படியாகவும் அனைத்து பணத் தேவைகளும், சந்திக்கப்படவும் ஜெபியுங்கள். பணித்தளத்திலிருந்து என் மனைவி **சகோதரி. வஹிதா தேவதாஸ்** மற்றும் அனைத்து பீல் சுதேச ஊழியர்களும், உங்கள் யாவருக்கும் வாழ்த்து கூறுகிறார்கள். உங்கள் யாவருக்காவும் நாங்களும் தவறாது ஜெபித்து வருகிறோம்.

**“இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி. அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்.” (எரேமியா 33:6)**

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*



(Rt.Rev.Dr.V. தேவதாஸ்)

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

## BTS தேர்வுகள் எழுதிய நமது 17 சுதேச ஊழியர்கள்

***பிரியமானவர்களே!***

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த ஜுன் மாதம் 8ம் தேதி உத்திரப்பிரதேசம் அலகாபாத் வேதாகம கல்லூரியில் (Uttarpradesh - Allahabad Bible Seminary) தொலைதூரக் கல்வி வாயிலாக BTS (Bachelor of Theological Studies) பயின்ற 55 சுதேச ஊழியர்கள் முதற்கட்டமாக பட்டம் பெற்று ஊழியம் செய்து வருகிறார்கள்.

இரண்டாவது கட்டமாக 17 சுதேச ஊழியர்கள் BTS (Bachelor of Theological Studies) படிக்க முன் வந்துள்ளார்கள். இவகளுக்கு வருடத்திற்கு இரண்டு செமஸ்டர்கள் உண்டு. ஒரு செமஸ்டருக்கு 6 பாடங்கள் வீதம் மொத்தம் நான்கு ஆண்டுகள் படிக்க வேண்டும். கடந்த ஆகஸ்ட் மாதம் 24, 26, 28 ஆகிய தேதிகளில் இந்த 17 ஊழியர்களுக்கு முதலாம் செமஸ்டர் தேர்வும், பழைய 7 மாணவர்களில் விடுபட்ட பாடங்களை எழுத தேர்வும் நடைபெற்றது. இதில் அனைவரும் மிகவும் உற்சாகமாய் தேர்வுகளை எழுதினார்கள். தேவனுக்கே மகிமை.

மேலும் கல்வியறிவு கொஞ்சமும் இல்லாமல் இருந்து இந்த ஆதிவாசி மக்களை தேவன் எடுத்து இன்று வேதாகமக் கல்வி கொடுத்து வல்லமையாக பயன்படுத்துவதற்காக தேவனைத் துதிப்போம்! இந்த ஊழியர்களுக்காக தொடர்ந்து ஜெபிக்க அன்பாக வேண்டுகிறோம்.



# சேனைகளின் கர்த்தர் நம்மோடு இருக்கிறார்

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

நம்முடைய திரியேக தேவனுக்கு பல நாமங்கள் உண்டு. அதில் ஒன்று தான் அவர் நம்மோடு கூட இருக்கிறார். வேதாகமத்தில், பிதாவாகிய தேவனைக் குறித்து, **"சேனைகளின் கர்த்தர் நம்மோடு இருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்." (சங்கீதம்–46:11), "இந்தத் தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்."(சங்கீதம்–47:14).** என்று சொல்லப்பட்டிருக்கிறது. குமாரனாகிய இயேசுவைக் குறித்தும் வேதாகமத்தில் **"அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்." (மத்.1:23)**

நம் இரட்சகராகிய இயேசு உயிர்த்தெழுந்து பரத்துக்கேறுகையில் என்ன கூறினார் **"இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்." (மத்தேயு–28:20)**பரிசுத்த ஆவியானவரை குறித்து இயேசு கிறிஸ்து இவ்வாறு உரைத்தார் **"நான் பிதாவை வேண்டிக்கொள்ளுகிறேன், அப்பொழுது என்றைன்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்."(யோவன்–14:16)**

ஆகவே நாம் கர்த்தரை ஆராதித்து, அவருடைய பிள்ளைகளாய் வாழும் போது தேவன் நம்மோடு கூட இருக்கிறார் என்பதை நாம் மறக்கவே கூடாது. உலகத்தில் நாம் வாழும் போதும், ஊழியப் பாதையில் கடந்து செல்லும் போதும் தேவன் நம்முடன் இருந்து நம்மை ஆசீர்வதிக்கிறார். வேதத்தில் தேவன் அநேக தம் தாசர்களுடன் இருந்து ஆசீர்வாதங்களை கட்டளையிட்டதை நாம் காண்கிறோம். அவற்றில் ஒன்றை மட்டும் தியானிப்போம். அப்படி தேவன் தம் தாசர்களுடன் இருக்கும் போது எப்படிப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெறுகிறோம்? என்பதையும் தியானிப்போம். நாமும் அவைகளை விசுவாசித்துப் பெற்றுக் கொள்வோம்.

**1. நம் சிறையிருப்புகள் மாற்றப்பட்டு சிங்காசனத்திற்கு உயர்த்தப்படுகிறோம்.**

ஆதியாகமம்–39ம் அதிகாரத்தினை வாசித்துப் பாருங்கள். யோசேப்பு என்ற வாலிபன், தேவனுடைய பிள்ளை. தேவன் அவனுக்கு விசேஷித்த ஆவியை தந்தருளினார். தரிசனங்களைக் காணும்படி கிருபை தந்தார். ஆனால், அவன் வாழ்வில் தன் சொந்த சகோதரர்களின் பொறாமையின் நிமித்தமாக அந்நிய தேசத்தில் விற்கப்பட்டது மட்டுமல்ல, தான் செய்யாத பாவத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டான். வேதம் சொல்லுகிறது, அடிமையாக விற்கப்பட்டபோதும் தேவன் அவனோடு இருந்தார்.

ஆதியாகமம்: 39ம் அதிகாரத்தில் 2,3,21,23 ஆகிய 4 வசனங்களிலும் கர்த்தர் யோசேப்போடு கூட இருந்தார் என்று வாசிக்கிறோம். ஆகவே 41ம் அதிகாரத்தில், சிறையில் இருந்த அவனை சிங்காசனத்திற்கு உயர்த்தி தேசத்திற்கு ஆசீர்வாதமாக மாற்றினார். யோசேப்பு தன் சகோதரர்களிடம் என்ன சாட்சி கூறினார்?. **“நீங்கள் எனக்கு தீமை செய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்.”(ஆதி–50:20)** எனக்கன்பானவர்களே! ஒருவேளை யோசேப்பைப் போல நீங்களும் சிறையிருப்பின் கட்டுகளில், அடிமைத்தனத்தில் சிறுமைப்பட்டு கொண்டிருக்கிறீர்களா? கலங்க வேண்டாம் உங்களுடைய எல்லா சூழ்நிலைகளிலும் தேவன் உங்களுடன் இருக்கிறார். உங்களை கட்டாயம் அவர் உயர்த்தப்போகிறார். விசுவாசத்துடன் அவரை நோக்கி பாருங்கள்.

**2. பஞ்ச காலத்தில் 100 மடங்கு ஆசீர்வாதத்தை பெற்று கொள்கிறோம்.**

ஆபிராகாமின் குமாரனாகிய ஈசாக்கின் வாழ்வில் தேவன் வாக்கு கொடுத்தார். **ஆதி.26:3**ல் வாசிக்கிறோம். இந்த தேசத்தில் வாசம்பண்ணு, நான் உன் மகனோடே இருந்து உன்னை ஆசீர்வதிப்பேன் என்று வாக்கு கொடுத்தார். ஆனால் அந்த தேசத்தில் பஞ்சம் உண்டாகியிருந்த காலம், அது மட்டுமல்லாமல் பெலிஸ்தர்கள் அவன் மீது பொறாமை கொண்டார்கள். அவன் பிரயாசங்களை அழித்துப் போட்டார்கள். துரவுகளை மூடிவிட்டார்கள். ஆனாலும் ஈசாக்கு மனம் தளரவில்லை. என் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவன் இல்லாதவைகளை இருக்கிறவைகள் போல் அழைக்கிற தேவன். மரித்துப்போனவை

என்றென்னப்பட்டவைகளை உயிர்ப்பிக்கிற தேவன். அவர் சொன்ன வாக்கின்படி **ஆதி.26:24** வாசித்துப் பாருங்கள் **"நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமுடைய தேவன், பயப்படாதே, நான் உன்னோடேகூட இருந்து, என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியைப் பெருகப்பண்ணுவேன் என்றார்."** அப்படியே தேவன் கூட இருந்து ஆசீர்வாதத்தை அபிமேலேக்கு சாட்சியாக கூறினார். அன்பானவர்களே! தேவன் நம்முடன் இருக்கும்போது **"இல்லாமை"** என்பது இல்லாமற்போய் விடும். நூறுமடங்கு ஆசீர்வாதம் தேவன் நம்முடன் இருப்பதால் உண்டாகும்.

**3. தேசத்தில் எதிரிகளை துரத்தி, நம் கீர்த்தியை பரம்ப செய்கிறார்.**

**"இவ்விதமாய் கர்த்தர் யோசுவாவோடேகூட இருந்தார்; அவன் கீர்த்தி தேசமெங்குபரம்பிற்று."(யோசுவா–6:27)** கர்த்தருடைய தாசனாகிய மோசேயை கர்த்தர் எடுத்துக் கொண்ட பின்பு, அத்தனை லட்ச குடும்பங்களை நடத்தி செல்லும் மிகப் பெரிய பொறுப்பு யோசுவாவின் மேல் விழுந்தது. ஆனால் சர்வ வல்லமையுள்ள தேவன் யோசுவாவை பார்த்து, ஊழியப்பாதையைப் பொறுப்பெடுத்தவுடன் தேவன் தந்த வாக்குத்தத்தம் என்ன? **யோசுவா–1:5** வாசித்துப் பாருங்கள்**"நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை நான் மோசேயோடே இருந்தது போல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை."** உன் தலைவன் மோசேயோடு இருந்தது போல் நான் உன்னோடு இருப்பேன் என்று 5,9வசனங்களில் உறுதிப்படுத்துகிறார். மோசேயுடன் யோசுவா ஊழியம் செய்த காலங்களில் மோசே சந்தித்த பிரச்சினைகளை யோசுவா அறிவார். மட்டுமல்லாமல் புதிய பொறுப்பு, கானான் தேசத்தை சுதந்தரித்து பகிர்ந்து கொடுக்க வேண்டும். ஆனால் அழைத்து, அபிஷேகித்து, நடத்தி வருகிற தேவன் தந்த வாக்கின்படியே தேவ ஜனங்களை நடத்திச் செல்ல குறிப்பாக யோர்தானை கடக்க, எரிகோ கோட்டைகளை தகர்த்தெறிந்து முன்செல்ல, 31 ராஜாக்களை வென்று தேவ ஜனமாகிய இஸ்ரவேல் மக்களுக்கு வாக்குத் தந்த கானான் தேசத்தை பங்கிட்டு கொடுக்கும்வரை தேவன் யோசுவாவுடன் கூட இருந்தார்.

அன்பானவர்களே! தேவன் நமக்கு கொடுத்த புதிய பொறுப்புகள், நமக்கு முன்பாக இருக்கும் சவால்கள், எப்படி குடும்பத்தை நடத்தி செல்லச் முடியும், வியாபாரத்தை, தொழிலை

நடத்திச் செல்ல முடியும், ஊழியப்பாதையில் எப்படி முன்னேறிச் செல்ல முடியும் சேனைகளின் கர்த்தர் சொல்கிறார். **"நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை."**

**4. யுத்தங்களை நடத்தி வெற்றியை பெற செய்கிறார்.**

**2 நாளாகமம் 32ம்** அதிகாரத்தில், அசீரியா ராஜாவாகிய சனகெரிப் எருசலேமிற்கு விரோதமாக திரளான படையுடன் வந்து சூழ்ந்து கொண்டான். எசேக்கியா ராஜாவோ, கர்த்தரை தன் நம்பிக்கையாக கொண்ட அரசன். **2 நாளாகமம் 32:8**ஐ வாசித்துப் பாருங்கள் அவனோடிருக்கிறது மாம்ச புயம், **"நமக்குத் துணைநின்று நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர்"**தானே என்று சொல்லி, அவர்களைத் தேற்றினான். எசேக்கியா ராஜா தன்னுடைய படைபலம், குதிரைபலம், இரதங்களின் மகிமை, பராக்கிரமசாலிகள், யுத்த வீரர்கள், மற்றும் ராணுவ ஆயுதங்கள் இருந்தாலும் முதல் நம்பிக்கை தேவன் நம்மோடிருக்கிறார், அவரே யுத்தங்களை நடத்துகிறவர். அல்லேலூயா! எசேக்கியா ராஜாவின் விசுவாசத்தை கண்ட சேனைகளின் தேவன் அந்த ஒரே இரவில் ஒரே ஒரு தூதனை அனுப்பி இலட்சத்து எண்பத்தையாயிரம் பேர்களை சங்கரித்தான். எசேக்கியாவின் ராணுவத்திற்கு வேலையே இல்லை. பாரமும், சுமையும் இல்லை. எனக்கன்பானவர்களே! வாழ்க்கைப்பாதையில், ஊழியத்தில் பாடுகள், யுத்தங்கள் சூழும் போதெல்லாம் நாம் உடனடியாக உலக குணத்தின்படி பரிகாரங்களைத் தேட வேண்டாம். எசேக்கியா ராஜாவைப் போல் நமக்கு துணை நின்று நம்முடைய யுத்தங்களை நடத்த, நம்மோடு இருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர் என்று விசுவாசத்துடன் எசேக்கியா இராஜாவைப்போலவும், ஏசாயா தீர்க்கதரிசியைப்போலவும் வானத்தை நோக்கி பிரார்த்தனை செய்வோம். தேவன் தாமே யுத்தங்களை நடத்தி வெற்றியைத் தருவார். **"நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்." (சங்கீதம்–46:10).**

**5. தேவன் அற்புத அடையாளங்களுடன் வசனத்தை உறுதிப்படுத்துகிறார்.**

நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பரத்திற்கு ஏறும் போது சீஷர்களை பார்த்து

உலகமெங்கும் போய் சகல ஜனங்களுக்கும் சுவிஷேசத்தை அறிவித்து, சீஷர்களாக மாற்ற கட்டளையிட்டார். மட்டுமல்லாமல் **மத்தேயு–28:20 "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்.** உங்களுடன் கடைசிமட்டும் கூட இருப்பேன் என்ற கர்த்தராகிய இயேசு அப்படியே செய்தார். அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூட இருந்து கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்**(மாற்கு–16:20).** ஆதி அப்போஸ்தலர்களுடன் கிரியை நடப்பித்த தேவன் இன்றும் அதை செய்துவருகிறார். பிதாவாகிய தேவனும், இயேசு கிறிஸ்துவும் வாக்குத்தம்பண்ணின பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார் என்பதை அப்போஸ்தல நடபடிகளில் வாசிக்கிறோம். **சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று. (அப்போஸ்தலர்–5:11), "திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள். பிணியாளிகளைப் படுக்கைகளின்மேலும் கட்டில்களின்மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள். சுற்றுப்பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள்; அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்." (அப்போஸ்தலர்–5:14,15,16)** அற்புத அடையாளங்களை ஆவியானவர் உடன் இருந்து நடப்பித்தார். ஆயிரமாயிரம் ஆத்துமாக்களை தேவனண்டை நடத்தினார்கள். அப்போது பவுல் உடன் பரிசுத்த ஆவியானவர் கூட இருந்தார். **(அப்போஸ்தலர்–9:1).** எருசலேமிலிருந்து, ரோம் தேசம் வரை சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. கிறிஸ்துவின் நாமம் அறிவிக்கப்பட்டது. அதே பரிசுத்த ஆவியானவர், இயேசுவே ஆண்டவர் என்பதை இந்த நூற்றாண்டிலும், நம் தலைமுறையிலும் மிஷனெரி ஊழியங்கள் மூலமாக, சபை ஊழியங்கள் மூலமாக நிறைவேற்றி வருகிறார். ஆவியானவரால் நாம் நிரப்பப்படும் போது, வழி நடத்தப்படும் போது ஆவியானவரும் நம்முடன் இருந்து ஆத்தும ஆதாயப்பணியில் நம் அனைவரையும் பயன்படுத்துகிறார். சபைகளிலும் நம் குடும்பங்களிலும் நம் தனிப்பட்ட வாழ்விலும் என்றென்றைக்கும் நம்முடன் இருக்கும் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரால் அனுதினமும் நிரப்பப்படுவோம். தேவனுடைய இராஜ்ஜியத்தை நம் தலைமுறையில், நம் தேசத்தில் கட்டுவோம். **ஆமென்!**

# அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய்

1. அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய்
அற்புத நாதர் உம் கரத்தில்
அனைத்தும் உமக்கே சொந்தம் என்று
அன்பரே என்னையே தத்தம் செய்தேன்

அனைத்தும் கிறிஸ்துவுக்கே எந்தன்
அனைத்தும் அர்ப்பணமே
என் முழுத்தன்மைகள் ஆவல்களும்
அனைத்தும் கிறிஸ்துவுக்கே

2. என் எண்ணம் போல நான் அலைந்தேனே
என்னைத் தடுத்திட்ட தாருமில்லை
உம்சிலுவை அன்பை சந்தித்தேனே
நொறுங்கி வீழ்ந்தேனே உம் பாதத்தில் – அனைத்தும்

3. ஐம்புலன்கள் யாவும் அடங்கிட
ஐம்பெருங் காயங்கள் ஏற்ற நாதா
வான் புவிக் கிரகங்கள் ஆள்பவரே
என்னையும் ஆண்டிட நீரே வல்லோர்

4. பாதாளம் மரணம் அண்டக் கூடா
மாபெரும் அக்னியாம் உந்தன் நேசம்
வெள்ளமோ ஆஸ்தியோ தணித்திடா
நேசமே, உமக்கே நான் அடிமை

5. என் வாழ்வில் இழந்த நன்மைக்கீடாய்
எஞ்சிய நாட்களில் உழைப்பேனே
நீர் தந்த ஈவு வரங்கள் யாவும்
உம் பணி சிறந்திட முற்றும் தந்தேன்

# “அர்பணித்தேன் என்னை முற்றிலுமாய்”



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். மேலே நாம் கண்ட இந்த **“அர்பணித்தேன் என்னை முற்றிலுமாய்”** என்ற இந்த பாடல் தற்போது உலகம் முழுவதும், அநேக ஊழியங்களிலும் தேவனால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த பாடலை இயற்றிய சகோ. அற்புதராஜ் மார்காஷிஸ் அவர்கள் நமது ஷாலோம் தலைமை அலுவலகத்தில் Communication Incharge – ஆக தன்னார்வமாக ஊழியம் செய்துவருகிறார்கள். இப்போதும் இவர் தனது சாட்சியையும் இந்த பாடல் பிறந்த விதத்தையும் நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக !

*பிரியமானவர்களே !*

நான் எனது 13வது வயதில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டேன். எனது கல்லூரி வாழ்வில் 3வது ஆண்டு படிக்கும்போது எங்கள் குடும்பத்தில் எதிர்பாராத சோக நிகழ்வுகள் ஏற்பட்டது. எங்கள் தாயார் திடீரென்று மரணத்துக்குட்பட்டார்கள். இதனால் வாழ்வில் விரக்தி அடைந்து இயேசுவின் அன்பைவிட்டு பின் வாங்கிப் போனேன். சுமார் 7 ஆண்டுகள் தேவனற்ற மனிதனாக, நாத்திக கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு என் மனம் போல் வாழ்ந்தேன். தொடர்ந்து எங்கள் குடும்பத்தில் எதிர்பாராத இழப்புகள், இதனால் வாழ்க்கையில் வெறுப்படைந்து இருந்த சூழ்நிலையில், இயேசு கிறிஸ்து என்னை பெயர் சொல்லி அழைத்து மீண்டும் தம் சொந்த பிள்ளையாக ஏற்றுக் கொண்டார். 1969ல் மீண்டும் மறுபிறப்பின் அனுபவம் பெற்றேன். அதிலிருந்து இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழவும், கர்த்தருடைய ஊழியங்களைச் செய்யவும் கர்த்தர் வழி நடத்தினார். பாடல்களில் ஆர்வம் கொண்ட நான் **“உயிரோடிருக்குமட்டும் என் கர்த்தரைப் பாடுவேன்; நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன்”** சங். 104 :33 என்ற வசனத்தின்படி தீர்மானம் செய்து கர்த்தரைப் பாட ஆரம்பித்தேன். அப்பொழுது கர்த்தர் எனக்கு அநேக பாடல்களைத் தரிசனங்களுடன் தந்தார். அப்பாடல்களில் ஒன்றுதான் **“அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய்”** என்ற பாடலாகும்.

1981ம் ஆண்டு கோயம்புத்தூரில் கிறிஸ்துவுக்கு வாலிபர் இயக்கம் (YFC) நடத்திய வாலிபர் முகாமில் செய்தி அளிக்க எனது இனிய நண்பர் சகோ. E. அகஸ்டின் ஆசீர் அவர்கள் (தற்போது Word for the World ல் இயக்குநராக இருக்கிறார்) என்னை அழைத்திருந்தார்கள். அந்த முகாமின் கருப்பொருள் **"முற்றிலும் அர்ப்பணம்"** முகாமிற்கு செய்தி ஆயத்தம் செய்து ஜெபித்துக் கொண்டிருக்கும்போது கர்த்தருடைய ஆவியானவர் என் உள்ளத்தில் கிரியை செய்தார். முற்றிலும் அர்ப்பணிக்காத பகுதிகளை என்னில் சுட்டிக் காட்டினார். அவைகளுக்காக மனம் வருந்தி நொறுங்கி ஜெபித்தபோது இந்த பாடல் என் உள்ளத்தில் எழுந்தது. இயேசு கிறிஸ்துவுக்கு என்னை அர்ப்பணிப்பதற்கு முன் என் நிலையையும், என் அனைத்து அவயவங்களை உருவாக்கினவர் அவைகளை ஆளுகை செய்ய வல்லவர் என்பதையும், உன்னதப்பாட்டு 8ம் அதிகாரத்திலுள்ள வசனங்களை எனக்குக் காட்டி இயேசுவோடே கொண்டுள்ள அன்பின் தன்மையையும் எனக்கு விளக்கமாக கற்பித்தார். இறுதியாக வீணாய் கடந்த நாட்கள் ஏராளம். கடந்தவைகளையே நினைத்துக் கொண்டிருக்காதபடி, எஞ்சிய ஆயுள் காலத்தில் கர்த்தர் தந்த தாலந்துகளை அவருக்காக பயன்படுத்துவேன் என்ற தீர்மானத்தோடு ஜெபித்து முடித்தபோது இப்பாடலிலுள்ள ஐந்து கவிகளும் அதற்குரிய ராகமும் சில நிமிடங்களில் கர்த்தர் எனக்குத் தந்தார். அவைகளை நான் பாடி மகிழ்ந்து அர்ப்பணித்தது மட்டுமல்ல இன்று உலகளவில் அனைத்த சபை மக்களாலும், சிறுவர், வாலிபர் முதியவர் அனைவராலும் பாடப்பட்டு வருவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியும், பேருவகையும் ஏற்படுத்தியுள்ளது. கோயம்புத்தூர் YFC வாலிபர் முகாமில் முதல் முதல் பாடியபோது அந்த முகாமில் கலந்து கொண்ட அனைவருமே இயேசு கிறிஸ்துவுக்காக தங்களை முழுமையாக அர்ப்பணித்தது என் வாழ்வில் நான் சந்தித்த அற்புத நிகழ்ச்சியாகும். மறக்க முடியாத அனுபவமுமாகும்.

அதற்குப் பின் குறிப்பாக FMPB, IMS, IEM, CGMM, SHALOM போன்ற மிஷனெரி ஸ்தாபனங்களில் இப்பாடலை அர்ப்பணிப்பு வேளையில் பயன்படுத்துகிறார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக ! இதைத் தொடர்ந்து 100க்கும் அதிகமான பாடல்களை தரிசனத்தோடு தேவன் எனக்குத் தந்துள்ளார் என்பதை மகிழ்வுடன் தெரிவிக்கிறேன். எனக்காகவும், கர்த்தர் எனக்குத் தந்த ஊழியங்களுக்காகவும் தயவு கூர்ந்து மறவாது ஜெபிக்க அன்பாய் கேட்கிறேன். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக !

என்றும் இரட்சகரின் பணியில்
***Bro. J. அற்புதராஜ் மர்காஷிஸ்***

ஜெபியுங்கள்

ஷாலோம் சுதேச ஊழியர்



# குடும்ப முகாம் - 2010

இடம் : ஆனந்த், குஜராத்

நாள் : 8,9,10, நவம்பர் – 2010

வல்லமையின் செய்தி :

**சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள்

**போதகர். டேவிட் பிரகாசம்** (கோவை) அவர்கள்

மற்றும் இயேசு விடுவிக்கிறார் குழுவினர்

## ஜெபியுங்கள்

- ✞ ஊழியர் கூட்டத்தில் தேவ வல்லமை வெளிப்படும்படியாக....
- ✞ ஒவ்வொரு ஊழியரும் அபிஷேகத்தாலும் தரிசனத்தாலும் நிரப்பப்பட...
- ✞ ஊழயர்களின் பிரயாணங்ளுக்காகவும், பாதுகாவலுக்காகவும்...
- ✞ அனைத்து தடைகள் நீங்கவும், தெய்வீக பாதுகாப்பிற்காவும்...
- ✞ தேவ ஊழியர்கள் அக்கினி ஜுவாலையாக பயன்படுத்தப்படவும்...
- ✞ கூட்ட ஒழுங்குகளுக்காகவும், இயற்கை சூழ்நிலைகளுக்காகவும்...
- ✞ கூட்டங்களுக்குத் தேவையான நிதி உதவி கிடைக்கப் பெறுவதற்காகவும் ஜெபியுங்கள்...

B ßØLúS¬«p..

¸¡ûU«u CúVÑ Uô\ôRYo F¯VeL¸u

# 2ம் ஆண்டு ஆரம்ப கூடுகை

தலைப்பு

## குடும்பங்கள் இயேசுவுக்கே

| நாள் | நேரம் |
| --- | --- |
| ***9,10-அக்டோபர், 2010***<br>***சனி, ஞாயிறு*** | ***மாலை 7.00 மணி முதல்***<br>***இரவு 9.00 மணி வரை*** |

இடம்

***தூய யோவான் பேரீஸ் ஹால்,***

மடத்துவிளை, ஆறுமுகநேரி



தேவ செய்தியாளர்கள்

***Rt. Rev. Dr. V. தேவதாஸ்*** அவர்கள்

*Bishop, Shalom Diocese in India - Gujarat.*

***Sis. வஹிதா தேவதாஸ்*** அவர்கள்

*Sharing Love Mission - Gujarat.*



®Vô§Vô! NôTUô! LPu ©WfNû]Vô!
G§oLôXjûRd Ï±jR TVUô! CdáhPeL°p
LXkÕ ùLôsÞeLs, ùUnVôLúY ®ÓRûXûV
ùTtßd ùLôsÅoLs.

கிறிஸ்துவின் பணியில்

***சகோ. D. கிறிஸ்டின் கெனிஸ்டின்***

செல் : 98656 71152, 94881 04091

# தந்தேன் என்னை இயேசுவுக்கே....



**சகோ. C. ஃப்ரங்க்ளின் பென்னட்**

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் C. ஃப்ரங்க்ளின் பென்னட், எனது சொந்த ஊர் மதுரை, திருநகர் ஆகும். நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவன். எனது பெற்றோர் என்னை சிறுவயதிலேயே ஊழியத்திற்கென்று அர்ப்பணித்தனர். தேவன் எனக்கு இசை மீட்டுவது, பாடல்கள் பாடுவது போன்ற தாலந்துகளை தந்திருக்கிறார். நான் B.Sc., Computer Science படிக்க தேவன் கிருபை செய்தார். எனது தங்கை பியூலாவிற்கு B.Sc., Nursing இடம் கிடைத்தது. எனது தங்கையின் படிப்பிறகு ரூ. 5.2 இலட்சங்கள் தேவைப்பட்டது, ஆகவே வங்கியில் கல்விக் கடனுக்காக பிரயாசப்பட்டோம் அதில் ரூ. 3.5 இலட்சங்கள் மட்டுமே கிடைத்தது. மீதி பணத்திற்கு என்ன செய்ய என்று நினைத்துக் கொண்டிருக்கையில், ஊழிய அழைப்பு எனக்கு இருந்த போதும் பணத்தேவையின் காரணமாக 5 ஆண்டுகள் Software Company–ல் பணிபுரிய முடிவு செய்தேன். ஆனால் தேவன் ஒரு வேலையையும் வாய்க்கப்பண்ணவில்லை. அதன்பின் ஷாலோம் ஊழிய பணித்தள அலுவலகத்தில் பணி புரியும் சகோதரி இவாஞ்சலின் மூலமாக, பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியங்களைக் குறித்து அறிந்து, சகோ. தேவதாஸ் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களை சந்தித்தோம். அவர்கள் ஊழிய அழைப்பு பெற்ற எனக்கு ஆராதனை ஊழியம் செய்ய குஜராத்திலுள்ள ஷாலோம் பணித்தள அலுவலகத்திற்கு அழைப்பு கொடுத்தார்கள். நானும் குஜராத் சென்று அங்கு ஒரு 10 நாட்கள் இருந்துவிட்டு திரும்பி விட வேண்டும் என்று எண்ணிக் கொண்டு, 07.01.2008 அன்று அங்கு சென்றேன். ஆனால் அங்கு சென்று தேவனுடைய சித்தம் என்ன என்பதை தெரிந்து கொள்ள ஜெபித்தேன். அப்பொழுது தேவன் தம்முடைய வசனத்தின் மூலமாக தெளிவாக என்னிடம் "நான் தான் உன்னை அழைத்து வந்தேன். இங்கு உனக்கு அநேக காரியங்களைக் கற்றுக்கொடுப்பேன்" என்று பேசினார். ஆகையால் நான் என்னை முழுமையாக ஒப்புக் கொடுத்தேன். மதுரையில் எங்களுடைய சபையில் ஆராதனை நடத்திக் கொண்டிருந்த என்னை தேவன் உயர்த்தி பீல் சுதேச ஊழியர்கள் ஆராதனையை நடத்தும் கிருபையைத் தந்துள்ளார். தேவனுக்கே மகிமை!



மேலும் தேவன் என்னை தம்முடைய ஊழியத்தில் தொடர்ந்து ஆராதனைகளை நடத்தவும், புதிய பாடல்களை இயற்றவும், அவர் எனக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றவும், ஷாலோம் ஊழியத்துடன் இணைந்து பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பின் பணியில் தேவன் என்னை வல்லமையாக பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

# Shalom Charity Mission

**A Sister Concern of SHARING LOVE MISSION**

பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் சமுதாய முன்னேற்ற பணி

## ஷாலோம் சேரிட்டி மிஷன்

பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 19 ஆண்டுகளாக தேவன் தந்த ***Sharing Love Mission*** (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடிக்கும் அதிகமாக வாழும் பீல் என்ற ஆதிவாசி மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கவும், அவர்களை இயேசு கிறிஸ்துவின் நல் சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார். இதுவரை தேவனுடைய கிருபையினால் 1 இலட்சத்திற்கும் அதிகமான ஆத்துமாக்கள் தேவனண்டையில் சேர்ந்துள்ளன.


கல்விப்பணி

அதே வேளையில் நமது விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள் மற்றும் விடுதிகள் கட்டுதல், மேலும் விசுவாசிகள் மற்றும் ஊழியர்களுக்கு ஆரம்ப சுகாதார பயிற்சி முகாம்கள் நடத்துதல், மருத்துவ முகாம்கள் நடத்துதல், மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றுதல் போன்ற வசதிகளையும் அவர்களுக்கு செய்து கொடுப்பது நமது கடமையாயிருக்கிறது. நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கை மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடுகின்றோம். இன்னும் வரும் காலங்களில் விசுவாசிகள் அதிகமாக அதிகமாக மிக அதிக அளவில் இந்தத் திட்டங்கள், நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு "கல்வி அறிவு வளர்ச்சி" திட்டங்களை செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.


மாணவர் விடுதி

இந்தத் திட்டங்கள் அனைத்தையும் செயல்படுத்துவதற்காக **Shalom Charity Mission** – என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. ***Sharing Love Mission*** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை கவனித்து செயல்பட்டு வருகிறது. **Shalom Charity Mission** – மற்ற சமுதாய முன்னேற்றப் பணிகளையும், குழந்தைகளின் கல்விப் பணிகளையும் கருத்தாகத் திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும். இதற்கு **Managing Trustee** ஆக சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களும், **Trustee** களாக Mr. J. வின்ஸ்டன், Dr. பிரேமா கிறிஸ்டோபர், Mr. J.M. ஜேக்கப், மற்றும் Mr. ஆபேல், ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர்.



மருத்துவப்பணி

ஆகவே பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் கல்விப்பணி, மாணவர் விடுதிப் பணி, இலக்கியப்பணி மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது, **Shalom Charity Mission** – என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மேலும் ஆதிவாசி மாணவர் கல்வி ஆதரவுத் தொகை அனுப்பி வருகின்ற ஆதரவாளர்களும் இனிமேல் **Shalom Charity Mission** – என்ற பெயருக்கே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம். மேலும் கீழே கொடுக்கப்பட்டுள்ள வங்கி கணக்கில் நேரடியாகவோ அல்லது அதில் **Net Transfer** மூலமாகவோ தங்களது காணிக்கைகளை செலுத்தலாம். அவ்வாறு வங்கிக் கணக்கில் தங்களது காணிக்கைகளை செலுத்தும் ஆதரவாளர்கள், உடனடியாக எங்களது தலைமை அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டு தெரிவிக்கும்படி அன்பாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.


ஆரம்ப சுகாதார பயிற்சி


| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION (Tuticorin Branch)** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 (IFS Code : UTIB0000105)** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 (IFS Code : TMBL0000174)** |

**SHALOM CHARITY MISSION**

**5/168, (Ground Floor) Caldwell Colony 3rd Street,**
**Tuticorin - 628 008.**
**Ph : 0461 - 2375468, Cell : 09345675468**
**E-mail : scm@shalommission.in**


குடிநீர் வசதி

## BTS தேர்வெழுதும் நமது சுதேச ஊழியரர்கள்





**BLESS INDIA VISION 2020**

நமது சுதேச ஊழியர்கள், மூப்பர்கள் மற்றும் விசுவாசிகளுக்கு

## ஆத்தும ஆதாயப் பயிற்சி





**குஜராத், காளேத் & பரேவா கிராம சபைகளில் ஊழியத்திற்கென்று பீல் மக்கள் வழங்கிய விளைவின் முதற்பலன்**





**ஷாலோம் அற்புதத்தின் நாளுக்காக (24.09.2010) ஜெபித்து ஆயத்தமாக்கப்பட்டு 450 கிராமங்களுக்கு அனுப்பப்பட்ட எண்ணெய் பாட்டில்கள்**





# பிரதிநிதியாய் செயல்படுவோர் தேவை....

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே,

19 வருடங்களை ஊழியப்பாதையில் கடந்துவர தேவன் கிருபை தந்துள்ளார். பீல் மக்கள் திரளாக இரட்சிக்கப்பட, பீல் சுதேச ஊழியர்களைத் தந்து, ஆலயங்கள் கட்டப்பட கிருபை செய்துள்ளார். இம்மாபெரும் மிஷனெரிப்பணியில் நாங்கள் மோசேயை போல் முன்னாக நின்று ஊழியங்களை நடத்தி சென்றாலும், எங்களுடன் பணிபுரிய அநேக யோசுவாக்களாக பீல் சுதேச ஊழியர்களை, தேசத்தை சுதந்தரிக்க தேவன் எழுப்பியுள்ளார். அதுபோல் ஜெபித்து, தாங்குகிற நீங்கள் தான் மிக முக்கியமானவர்கள். ஆரோன், ஊரைப்போல் நீங்கள் தாங்குவதின் நிமித்தமாக யேகோவா நிசி தேவன் மூலமாக வெற்றியை சுதந்தரிக்கிறோம்.

மேலும் ஆரோன், ஊரைப்போல் தாங்குகிற நீங்கள் எங்களுக்கு மிக முக்கியமானவர்கள். இப்பணியில் வரும் நாட்களில் 1000 ஊழியர்களை, 1000 சபைகளை ஸ்தாபிக்க மேலும் உங்கள் உதவியை நாடுகிறோம். உங்களில் பலர் மிஷனெரி பணி செய்ய வேண்டும் என்கிற வாஞ்சை கொண்டவர்கள் என விசுவாசிக்கிறேன். நீங்கள் மிஷனெரியாக செல்லமுடியவில்லை ஆனாலும் ஆத்தும பாரத்துடன் ஜெபித்து தாங்கி வருகிறீர்கள். அதற்காக தேவனை துதிக்கிறேன். நீங்கள் இன்னும் மிக நெருக்கமாக, அதிகமாக கற்று மிஷனெரி பணியில் ஈடுபட, பீல் மக்கள் திரளாய் இரட்சிக்கப்பட உங்களை ஈடுபடுத்திக் கொள்ள இன்னும் சில வாய்ப்புகளை தருகிறோம்.

ஷாலோம் மிஷனெரி பணிக்கென நீங்கள் பிரதிநிதியாக உங்கள் பகுதியில் செயல்பட உங்களை அன்புடன் அழைக்கிறேன். நம் மிஷனெரி பணியை ஜெபித்து தாங்குவோர் உங்கள் பகுதியில் சில தேவ பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களை நீங்கள் சந்தித்து மாதந்தோறும் அவர்கள் தரும் காணிக்கையை ஜெபித்து வாங்கி, சேர்த்து அனுப்பி வைக்கலாம். ஏற்கனவே உள்ள ஷாலோம் ஆதரவாளர் சொற்பமாக இருந்தாலும், இல்லையெனில் யாருமே இல்லாவிட்டாலும் நம் பணிகளை உங்களை சுற்றியுள்ள தேவ ஜனங்களுக்கு பத்திரிகை, பிரதிகள், VCD மூலமாக அறிமுகம் செய்து பங்காளர்களாக இணைய வைத்து ஜெபித்து தாங்க முன் வரலாம். குறைந்தது ஐந்து பேர்களையோ பத்து பேர்களையோ அறிமுகம் செய்து காணிக்கைகளை மாதம் தோறும் சேர்த்து அனுப்பலாம். இதுவரை நம் ஊழியத்திற்கு 40 பிரதிநிதிகள் காணிக்கை சேர்த்து அனுப்பி வருகிறார்கள்.

பிரதிநிதிகளாக செயல்பட முன்வருவோர் எங்களை தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும். அப்படி முன்வரும் பிரதிநிதிகளுக்கு விளக்கங்களைக் கூறி ஷாலோம் பத்திரிகைகள்

